**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066921

1. District : திருவள்ளூர் | PS: V & AC | Year: 2019 | FIR No.: 1/19 | Date: 07/03/19 16.00 Hrs.
மாவட்டம் | காவல்நிலையம் | ஆண்டு | மு.த.அ. எண் | நாள்

2. (i) Act சட்டம்: Cr. P.C. — Sections பிரிவுகள்: 102.
(ii) Act சட்டம்: The Prevention of the Corruption Act (Amendment) 2018. — Sections பிரிவுகள்: 7 and 7-A.
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 06/03/19 — Date to : நாள் வரை 06/03/19.
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 10.00 Hrs 06/03/19 — Time to : நேரம் வரை 16.00 Hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — Time : நேரம் 12.00 Hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06/03/19. — Time : நேரம் 13.00 Hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 60-கி.மீ. வடமேற்கு திசையில்.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி — மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திருமதி. சாந்தி ஜெனி
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் — இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் — Deputy cell officer.
(g) Address : முகவரி — District Vig. cell office Kanchipuram & Thiruvallur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) திரு. S. முருகேசன். அ/வ. 48, S/o. P. செங்கோடன் மோட்டார் வாகன ஆய்வாளர், மோட்டார் ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிப்பூண்டி (2) திரு. V. நவநீத கிருஷ்ணன். அ/வ. 48. S/o. வீரராகவ பெருமாள்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

காணக்கில் வரப்படாத ரொக்கம் ரூ. 1,85,230/= திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்டது.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் சிவகாமி. D... பதவி Inspector of Police, நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 07/03/19.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
08/03/2019.

Name: பெயர் D. சிவகாமி
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர், V & AC, திருவள்ளூர்.

**Thiruvallur V&AC, Cr.No.1/2019-FIR contents continues for Column-12:**

அனுப்புநர் திரு.து.சாந்தகுமாரி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் (இருப்பு) காஞ்சிபுரம் பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, காஞ்சிபுரம் (பொ) திருவள்ளூர் மாவட்டம். ந.க.146/ஆ/2019 நாள் 06.03.2019. அய்யா, பொருள்- திடீர் கூட்டாய்வு - திருவள்ளூர் மாவட்டம் - மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிப்பூண்டி - 06.03.2019 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர், காஞ்சிபுரம் அவர்களுடன் திடீர் கூட்டாய்வு மேற்கொண்டது - குறித்து. பார்வை - எனது செயல்முறைகள் ந.க. 146/ஆ 2019, நாள் 06.03.2019. திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் 06.03.2019 அன்று மாலை 04.00 மணி முதல் 08.00 மணி வரை திருவள்ளூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் ஊழல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு மற்றும் குழுவினருடன் திடீர் கூட்டாய்வு மேற்கொண்ட போது மேற்கண்ட அலுவலகத்திலிருந்தும் தனி நபர்களிடமிருந்தும் கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத தொகை ரூ.1,85,230/- (எழுத்தால் ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்தைந்தாயிரத்து இருநூற்று முப்பது மட்டும்) மற்றும் இதர ஆவணங்கள், இணைத்து பார்வையில் கண்ட செயல்முறைகள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து உரிய மேல் நடவடிக்கைக்காக அனுப்பியுள்ளேன் என கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, ஒப்பம் xxx (திரு.து.சாந்தகுமாரி,) மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் (இருப்பு) காஞ்சிபுரம். இணைப்பு மேலே கண்டவாறு கும்மிடிப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் திடீர் கூட்டுத் தணிக்கை நாள்- 06.03.2019. விவரம் வருமாறு காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் (இருப்பு) மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் (பொறுப்பு) ஆகியோர்களின் தலைமையில் காஞ்சிபுரம் மாவட்டம், கும்மிடிபூண்டி GNT சாலையில் அமைந்துள்ள கும்மிடிப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில், வாகனம் சம்மந்தமான வேலைகளை முடிக்க வரும் பொது மக்களிடமிருந்து, அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதல் பணம் லஞ்சமாக வசூலிப்பதாக கிடைத்த ரகசிய தகவலை தொடர்ந்து, இன்று 06.03.2019 -ஆம் தேதி மாலை 16.00 மணியளவில், மேற்குறிப்பிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிபூண்டி மேற்கொள்ளப்பட்ட திடீர் கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கைகள்.

**Thiruvallur V&AC, Cr.No.1/2019-FIR contents continues for Column-12:**

துறைத் தலைமை அலுவலர். — போக்குவரத்து ஆணையர், சேப்பாக்கம், எழிலகம், சென்னை-05.

மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிபூண்டியில் ஆய்வின்போது கலந்து கொண்டவர்கள்.

1. திருமதி.D.சாந்தகுமாரி
   மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்
   காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள்
   (இருப்பு), காஞ்சிபுரம்.
2. திரு.T.சிவபாதசேகரன்
   காவல் துணை கண்காணிப்பாளர்,
   ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு,
   காஞ்சிபுரம். (பொறுப்பு) திருவள்ளூர்.
3. திருமதி.D.சிவகாமி,
   காவல் ஆய்வாளர்,
   ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர்
4. திரு.V.கணேசன்
   காவல் ஆய்வாளர்,
   ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம்.
5. திரு.G.அண்ணாதுரை
   காவல் ஆய்வாளர்,
   ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம்.
6. திரு.S.முருகேசன், ஆ வ.48, த பெ. P.செங்கோடன்,
   மோட்டார் வாகன ஆய்வாளர்,
   மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம்,
   கும்மிடிபூண்டி, திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி GNT சாலையில் அமைந்துள்ள கும்மிடிப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் இன்று 06.03.2019-ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. இக்கூட்டாய்வானது, திருமதி.சாந்தகுமாரி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள், (இருப்பு) காஞ்சிபுரம் அவர்களின் தலைமையில், காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் (பொறுப்பு) திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மற்றும் அவர்களது பார்ட்டியுடன் இணைந்து திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் கூட்டாய்வு மேற்கொண்டபோது, திரு.S.முருகேசன், வ-48, த/பெ. P.செங்கோடன், மோட்டார் வாகன ஆய்வாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம் அவர்களும், திருமதி.K.பானு, வயது-38, க பெ. உமாசங்கர், Data Entry operator, (Bonton staff), மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிப்பூண்டி,

**Thiruvallur V&AC, Cr.No.1/2019-FIR contents continues for Column-12:**

திரு.S.பிரகாஷ், வயது (24) த/பெ.சிவலிங்கம், Data Entry operator, (Bonton staff). மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிப்பூண்டி. ஆகியோர்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டத்தில் பணியிலிருந்தனர். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான நான், மேற்படி அலுவலர்களுக்கு என்னையும் மற்றும் ஆய்வுக் குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து, அடையான அட்டையை காண்பித்தும், பின் ஆய்வுக் குழுவில் உள்ள அனைவரும் தங்களது உடமைகளை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.S.முருகேசன் மற்றும் அவரது அலுவலகத்தில் இருந்த அலுவலர்களிடம் சுயசோதனை செய்துகாட்டி, அலுவலக சோதனையை ஆரம்பித்து, அலுவலகம் முழுவதும் சோதனை செய்தோம். அப்போது, மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் அலுவலகத்தில் கடைசி பகுதியில் இடது பக்கமுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் கிழக்கு நோக்கியிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரது அறைக்கு முன்னால் டைனிங் ரூம் உள்ளது. அதற்கு முன் Data Entry operator, (Bonton staff), கணினி அறையும், அதற்கு முன் தொலைகாட்சியுடன் வரவேற்பறையும் உள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு எதிரே கணினி கட்டுபாட்டு அறையும், அதற்கு பக்கத்தில் கிழக்கு நோக்கி A1 Section, counter -1 உள்ளது அதனுடன் இணைந்த பாத்ரூம் உள்ளது. மேலும் அதற்குள் ஆவண பதிவறையும் உள்ளது. இவ்வலுவலகத்தின் முதல் மாடியில் ஸ்ரீராம் பைனான்ஸ் அலுவலகம் உள்ளது. இரண்டாவது மாடியில் காலியாக உள்ளது. மாடி படிக்கு கீழ் Cooper cop Invertor மற்றும் Battery உள்ளது. திருமதி. K.பானு, பெ/வ.38, க/பெ. உமாசங்கர், Data Entry operator, (Bonton staff), திரு.S.பிரகாஷ், ஆ/வ.24 த/பெ.சிவலிங்கம், Data Entry operator, (Bonton staff), அவரது பணியை செய்துக்கொண்டிருந்தார்கள். மேலும், அலுவலகத்திற்குள் இருந்தவர்களை விசாரிக்க வெளிநபர்களான, திரு.நவநிதகிருஷ்ணன்,வ-38, த/பெ.வீரராகவபெருமாள், திரு.ச.விஜயகுமார்.வ-35,த/பெ.சந்திரன், திரு.G.ஆனந்தபத்மநாபன், வயது-47, த/ப.கஜாநதம், திரு.M.சசிகுமார் வ35, த/பெ.முனுசாமி, திரு.A.விக்னேஷ் வ-28, த/பெ.அன்பழகன் ஆகியோர்கள் சந்தேகத்திற்கிடமான நிலையில் அலுவலகத்தின் உட்புறம் இருந்தனர். மேற்குறிப்பிட்ட வெளிநபர்களை விசாரிக்க (1) திரு.நவநீதகிருஷ்ணன் ஆ/வ.38,த/பெ.வீரராகவபெருமாள் என்பவர் சாய் பாலாஜி ஓட்டுநர் பள்ளியில் பணிபுரிவதாகவும், ஓட்டுநர் பள்ளி வேலை சம்மந்தமாக வந்ததாக கூறினார். அவர் கையில் வைத்திருந்த ரூ.4,730/-பணத்திற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை அப்பணம் லஞ்சம் கொடுக்க வைந்திருந்த பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. (2)

**Thiruvallur V&AC, Cr.No.1/2019-FIR contents continues for Column-12:**

திரு.ச.விஜயகுமார்.ஆ/வ.35,த/பெ.சந்திரன், என்பவரை விசாரிக்க அவர் VMS பஜாஜ் டீலர், வசந்தம் லாரி ட்ரான்ஸ்போர்ட் (88 லாரிகள்), SBT லாரி ட்ரான்ஸ்போர்ட் (12 லாரிகள்), ஆகிய கம்பெனிகளுக்கு லைசனிங் அலுவலராக உள்ளதாகவும். அவரிடம் ரூ.24,130/- இருந்தது அப்பணத்திற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. அப்பணம் லஞ்சம் கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது மேலும் அவரது பேக்கில் வைத்து இருந்த 21 ஒரிஜினல் ஆர்சி புத்தகங்களை ஆய்வு செய்து அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. (3) திரு.G.ஆனந்தபத்மநாபன்,வயது-47,த/ப.கஜானதம். என்பவர் சாய் பாலாஜி ஓட்டுநர் பள்ளியில் பணிபுரிவதாகவும், ஓட்டுநர் பள்ளி வேலை சம்மந்தமாக வந்ததாக கூறினார். அவர் கையில் வைத்திருந்த ரூ.770/-பணத்திற்கு தகுந்த விளக்கம் தெரிவித்ததால் அப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. (4) திரு.M.சசிகுமார் ஆ/வ.35, த/பெ.முனுசாமி. என்பவர் T.J.S Engineering college and Group of Companies – Transport incharge ஆக உள்ளதாகவும். தங்களது கல்லூரி வாகனங்களின் பணி தொடர்பான வந்ததாகவும். அவர் கையில் வைத்திருந்த ரூ.16,090/- பணத்திற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. ஆதலால் அப்பணத்தை கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது பேக்கில் வைத்து இருந்த 23 ஒரிஜினல் ஆர்சி புத்தகங்களை ஆய்வு செய்து அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. (5) திரு.A.விக்னேஷ் ஆ/வ.28, த/பெ.அன்பழகன். (Yamaha Delar ,Arihant motors, Staff ஆக உள்ளதாகவும். தனது கம்பெனி பணியாக வந்ததாக தெரிவித்தார். அவர் கையில் வைத்திருந்த ரூ.620/- பணத்திற்கு தகுந்த முகாந்திரம் தெரிவித்தால் அப்பணம். அவரிடமே திருப்பி வழங்கப்பட்டது. மேலும் அலுவலகத்தை சோதனை செய்ததில். ஆவண பதிவரையில் உள்ள இரும்பு ரேக்கில் அடிக்கி வைக்கப்பட்டிருந்த TN 18 AY 3101 என்ற வாகனத்தின் ஆவணங்களை கட்டி வைத்திருந்த கட்டுகளுக்கு இடையே ரூபாய் 2000x 20 = ரூ.40,000/-, ரூ.500x99= ரூ.49,500/-, ரூ.200x1= ரூ.200/-, ரூ.100x22= ரூ.2,200/-, ரூ.50x2= ரூ.100, ரூ.20x1= ரூ.20, மற்றம் ரூ.10x1= ரூ.10 மொத்தம் ரூ.92,030/- இருந்தது அப்பணம் குறித்து அலுவலகத்தில் விசாரிக்க அனைவரும் தங்களுடையது இல்லை என்று தெரிவித்ததால். அப்பணமும் கையூட்டாக பெற்று மறைத்து வைத்திருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.S.முருகேசன் அவர்கள் தினமும் பயன்படுத்தும் TN 19 Q 3435 Swift Desire காரினை சோதனை செய்ததில் முன்பக்க சீட்டில் இருந்த பணம் ரூ.2000x10= ரூ.20,000/- இப்பணத்தை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விசாரிக்க அவர் அப்பணத்தினைப்பற்றி தனக்கு

**Thiruvallur V&AC, Cr.No.1/2019-FIR contents continues for Column-12:**

ஏதுவும் தெரியாது என தெரிவித்தார். எனவே அப்பணம் லஞ்சப்பணமாக இருக்கக்கூடும் என கருதி கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் கைப்பற்றப்பட்ட பணத்தில் ரூ.1,85,230/-ல் (ரூ.2000 நோட்டுகள் X 37 = ரூ.74,000, ரூ.500 நோட்டுகள் x 188= ரூ.94,000/-, ரூ.200 நோட்டுகள் x 15 = ரூ.3000, ரூ.100 நோட்டுகள் x 136 = ரூ.13,600/-ரூ.50 நோட்டுகள் x 10 = ரூ.500/-, ரூ.20 நோட்டுகள் x 3 = ரூ.60/-, ரூ.10 நோட்டுகள் x 7 = ரூ.70/- ஆக மொத்தம் ரூ. 1,85,230/- பணத்தை கைப்பற்றப்பட்டது.

| வ.எண். | வெளிநபர்களின் பெயர்கள் | இருப்பின் மதிப்பு | திரும்ப கொடுத்தது |
|---|---|---|---|
| 1. | திரு.நவநிதகிருஉஷ்ணன்,வ-38, த/பெ.வீரராகவபெருமாள், எண்.42, 20வது தெரு, செக்ரட்ரி காலனி, லட்சுமிபுரம், சென்னை -99 (சாய் பாலாஜி ஓட்டுநர் பள்ளி) | ரூ.4,730/- | -- |
| 2. | திரு.ச.விஜயகுமார்,வ-35,த/பெ.சந்திரன், எண்.34, மாரியம்மன் கோயில்தெரு, தோக்கமூர் கிராமம், ஆரம்பாக்கம் அஞ்சல், கும்மிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் (VMS பஜாஜ் டீலார் அலுவலர்) | ரூ.24,130/- | -- |
| 3. | திரு.G.ஆனந்தபத்மநாபன்,வயது-47,த/ப.கஜாநதம், பனப்பாக்கம் கிராமம், கவரைபேட்டை அஞ்சல், மகாத்மா காந்தி தெரு, ஸ்ரீபெரும்புதூர் (சாய் பாலாஜி ஓட்டுநர் பள்ளி) | ரூ.770/- | ரூ.770/- |
| 4. | திரு.M.சசிகுமார் வ35, த/பெ.முனுசாமி, வழுதலம்பேடு கிராமம், கும்மிடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் (T.J.S Engineering college and Group of Companies – Transport incharge) சுகூட லை | ரூ.16,090/- + 28,250/- | -- |
| 5. | திரு.A.விக்னேஉஷ் வ-28, த/பெ.அன்பழகன், எண்.42, 20வது தெரு, செக்ரட்ரி காலனி, லட்சுமிபுரம், சென்னை -99 (Yamaha Delar ,Arihant motors, Staff) | ரூ.620/- | ரூ.620/- |
| | | ரூ.74,590 | ரூ.1,390/- |

**Thiruvallur V&AC, Cr.No.1/2019-FIR contents continues for Column-12:**

மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களிடம் இருந்த தொகைகளின் விவரம்.

| வ.எண். | வெளிநபர்களின் பெயர்கள் | இருப்பின் மதிப்பு |
|---|---|---|
| 1. | திரு.S.முருகேசன், வ-48, த பெ. P.செங்கோடன்,மோட்டார் வாகன ஆய்வாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிபூண்டி, திருவள்ளூர் மாவட்டம் | ரூ.430/- |
| 2. | திருமதி.K.பானு, வயது-38, க பெ. உமாசங்கர், Data Entry operator, (Bonton staff), மோட்டார் வாகன ஆய்வளார், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிபூண்டி. | என்டிரி இல்லை |
| 3. | திரு.S.பிரகாஷ், வயது (24) த பெ.சிவலிங்கம், Data Entry operator, (Bonton staff), மோட்டார் வாகன ஆய்வளார், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிபூண்டி. | என்டிரி இல்லை |

மேற்குறிப்பிட்ட அலுவலர்களின் தொகைகளை சரிபார்த்து அலுவலக "பணியாளர் பணம் கையிருப்பு பதிவேடு" மூலம் 06.03.2019-ன்படி திரு.S.முருகேசன்,மோட்டார் வாகன ஆய்வாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிப்பூண்டி பணம் சரிபார்க்க சரியாக இருந்ததால், அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திருமதி.K.பானு, பெ/வ.38, க பெ. உமாசங்கர், Data Entry operator, (Bonton staff) அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.120/- மட்டும் வைத்திருந்தார். அப்பணம் பஸ் டிக்கெட்டாக வைத்திருப்பதாக தெரிவித்ததால் திருப்பி அவரிடமே கொடுக்கப்பட்டது. மேலும் திரு.S.பிரகாஷ், ஆ/வ. 24 த பெ.சிவலிங்கம், Data Entry operator, (Bonton staff) என்பவரை சோதனை செய்தபோது ரூ.70/- மட்டும் வைத்திருந்தார். அப்பணம் பஸ் டிக்கெட்டாக வைத்திருப்பதாக தெரிவித்ததால் திருப்பி அவரிடமே கொடுக்கப்பட்டது. மேலும், அலுவலக பணியாளர்கள், அலுவலகத்திற்கு வந்த வெளி நபர்களிடம் விசாரித்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் கூட்டாய்வில் சரியான முகாந்திரம் கூற முடியாத பணம் அதாவது அவைகள் லஞ்சப்பணம் என முடிவு செய்து மொத்தம் ரூ.1,85,230/- கைப்பற்றப்பட்டது. மேலும், அரசால் ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்ட லஞ்ச ஒழிப்பு சம்மந்தமான விழிப்புணர்வு பலகை ஆவனகாப்பக அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. எனவே மேற்படி லஞ்ச ஒழிப்பு சம்மந்தமான விழிப்புணர்வு பலகை பொதுமக்கள் பார்வைக்கு தெரியும்படி வைக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும் இன்று 06.03.2019 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் வசூலான பணம் ரூ.5000/- வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது. பணப்பதிவேட்டில் பணம் ஏதும் இருப்பில் இல்லையென பதிவு செய்யப்பட்டுள்ளது. பணப்பெட்டியை சோதனை செய்ததில் பணம் ஏதும் இருப்பில்

**Thiruvallur V&AC, Cr.No.1/2019-FIR contents continues for Column-12:**

இல்லை. தேவையான ஆவணங்களின் நகல்களான, (1) பிப்ரவரி, மார்ச் -2019 மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் வருகைப்பதிவேடு 2019, பக்கம் 1 முதல் 15 வரை. (2) மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் வருகைப்பதிவேட்டின் சுருக்கம் 05.03.19 மற்றும் 06.03.19 பக்கம் 1 முதல் 7 (3) பணியாளர் பண கையிருப்பு பதிவேடு (06.03.2019), பக்கம் 1 முதல் 5வரை, (4) பணப்பதிவேடு. நாள் 06.03.19 பக்கம் 1 முதல் 5 வரை (5) Daily cash statement, dated 06.03.2019 பக்கம் 1 மட்டும், (6) அலுவலக முத்திரை பதிவேடு 2019 பக்கம் 1 முதல் 5 வரை (7) Bonton staff வருகைபதிவேடு 2019 பக்கம் 1 முதல் 15 வரை (8) Account Head wise consolidated statement dated 06.03.2019 1 முதல் 5 வரை மேலும் மேற்படி ஆவணங்களில் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் உண்மை நகல் சான்றொப்பம் பெறப்பட்டது. அனைத்து நடவடிக்கைகளும், இன்று 06.03.2019 ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம் xxx
திருமதி.D.சாந்தகுமாரி
மாவட்ட துணை ஆய்வுக்குழு
அலுவலர் காஞ்சிபுரம் மற்றும்
திருவள்ளூர் மாவட்டங்கள்
(இருப்பு), காஞ்சிபுரம்.

ஒப்பம் xxx
திரு.T.சிவபாதசேகரன்.
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்புப்பிரிவு,
காஞ்சிபுரம்.
(பொறுப்பு) திருவள்ளூர்

ஒப்பம் xxx
திருமதி.D.சிவகாமி
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு,
திருவள்ளூர்.

ஒப்பம் xxx
திரு.V.கணேசன்,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு,
காஞ்சிபுரம்

ஒப்பம xxx
திரு.G.அண்ணாதுரை,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு &கண்காணிப்பு பிரிவு,
காஞ்சிபுரம்

ஒப்பம் xxx
திரு.S.முருகேசன், வ-48,
த பெ P.செங்கோடன்,
மோட்டார் வாகன ஆய்வாளர்,
மோட்டார் வாகன ஆய்வாளர்
அலுவலகம், கும்மிடிபூண்டி,
திருவள்ளூர் மாவட்டம்

**Thiruvallur V&AC, Cr.No.1/2019-FIR contents continues for Column-12:**

**அய்யா,**

**மேற்படி கடிதத்தினை D.S.P., V&AC காஞ்சிபுரம் (i/c) திருவள்ளூர் அவர்களின் உத்தரவு படி V&AC/ TVLR.**Cr.No.01/AC/2019/TVLR. U/s. 102 Cr.P.C. r/w. 7 and 7-A of the PC Act (Amendment) 2018 -ல் 07.03.2019 **அன்று** 16.00 **மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.** (Sd.D.Sivagami, Inspector of Police, V&AC, Thiruvallur).

The original FIR along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, Statements of Accused, Cash Rs.1, 85,230/- and seized attested copy of the registers maintained at office of the Motor Vehicle Inspector, Gummidipoondi, Thiruvallur District at the time of surprise check, are submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and the other copies are forwarded to Superior Officers concerned.

**(D.SIVAGAMI)**
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Thiruvallur